2018 ஜனவரி 11] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

வரும் ஜனவரி 14 ஆம் நாள், வரலாற்றுச் சிறப்புமிக்க நமது மாநிலம் 'தமிழ்நாடு' என்ற பெயரோடு 50–வது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதை முன்னிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு பொன்விழா ஆண்டாக மாண்புமிகு அம்மாவின் அரசு கொண்டாட முடிவு செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம் கண் போன்ற தமிழ் மொழி மற்றும் தமிழர்களின் பெருமையைப் பறைசாற்றும் வகையில், கலை, விளையாட்டு, கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டி போன்ற நிகழ்ச்சிகள் சென்னையிலும், அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக நடத்தப்படும். தமிழ் ஆராய்ச்சியில் சிறந்து விளங்கும் இளம் தமிழ் ஆய்வாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, சென்னையில் நடைபெறும் நிறைவு விழாவில் இவர்கள் அனைவரும் சிறப்பிக்கப்படுவார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அம்மாவின் அரசு, "தமிழுண்டு, தமிழ் மக்களுண்டு– இன்பத் தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு" என்ற பாவேந்தரின் வரிகளுக்கேற்ப தமிழ் மொழியையும், தமிழ்நாட்டையும் கண்ணின் மணி போல தொடர்ந்து காத்து வரும் என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–25

4. 'தமிழ்நாடு' பொன்விழா ஆண்டு கொண்டாடுதல் குறித்த முதலமைச்சரின் அறிவிப்பிற்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறிவிலே தெளிவு, நெஞ்சத்திலே உறுதி, அகத்திலே அன்பினோர் வெள்ளம், பொறிகளின்மீது தனி அரசாணை, பொழுதெல்லாம் இறைப் பேரருள், நெறியிலே நாட்டம்" என்ற பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் வாழ்ந்து, உலகத் தமிழினத்தின் ஒரே அடையாளமாக உயர்ந்து ஓங்கி நிற்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதல் வணக்கம்.

[திரு. க. பாண்டியராஜன்] [2018 ஜனவரி 11

(மேசையைத் தட்டும் ஒலி) புத்தம் புதிய கலைகள் பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் “மெத்த வளருது மேற்கே, அந்த மேன்மைக் கலைகள் தமிழிலே இல்லை, சொல்லவும் கூடுவதில்லை, அவை சொல்லும் திறமை தமிழ்மொழிக்கு இல்லை, மெல்லத் தமிழ் இனி சாகும் அந்த மேற்கு மொழிகள் புவி மிசை ஓங்கும்” என்று கூறிய பேதைக்கு மாற்றாக, “சென்றிடுவீர் எட்டுத்திக்கும், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்” என்ற பாரதியின் வார்த்தைக்கிணங்க, தமிழகத்தின் பொன்விழா ஆண்டை, தமிழ் மொழி, கலை, பண்பாடு ஆகிய அனைத்து விழுமியங்களின் உன்னத உயரத்தைத் தொடும் பொன்விழாவாக உருமாற்ற 11 முத்தான திட்டங்களுக்கு ஆணை பிறப்பித்து, இந்த வருடம் 2018 என்பதை, தமிழ் கலை, தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாட்டின் உன்னத உயரத்தைத் தொடும் ஆண்டாக அறிவித்திருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 11 திட்டங்களில், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தனித் தன்மையை மீட்டெடுத்தல், இசை/கவின் கலைப் பல்கலைக்கழகத்திற்கு உயிரூட்டல், உலகமெங்கும் தமிழ் வளர் மையங்களை உருவாக்குதல், இசை நடனப் பள்ளிகளை உலகமெங்கும் ஒருங்கிணைத்து, தமிழ்ப் பண்பாட்டு மையத்தை அமைத்திடுதல், ‘ஒன்றே பாரதம் உன்னத பாரதம்’ திட்டத்தின்கீழ் ஜம்மு மற்றும் காஷ்மீரில் 100 பள்ளிகளில் தமிழ் கற்றுக் கொடுக்கும் வாய்ப்பளித்தல், தமிழ் corpus–சொற்குவை என்ற திட்டத்தின் மூலமாக மாதத்திற்கு 1,000 சொற்களை தமிழுக்கு வரமாக அளித்தல் மற்றும் ஹார்வர்டு தமிழ் இருக்கை, டொரான்டோ தமிழ் இருக்கை, மொரீஷியஸ் தமிழ் இருக்கை என்று நோக்கும் திசையெல்லாம் தமிழ் ஆய்வை மிளிரச்செய்து, இதை ஒருங்கிணைத்து ஒரு research portal–ஆராய்ச்சி நுழைவாயில் அமைத்தல் மற்றும் 36 அருங்காட்சியகங்களையும் தமிழர் தொன்மையினை உலகத்திற்கு உணர்த்தும் தரம் மிக்க வரலாற்றுக் காட்சிக் கூடங்களாக உருமாற்றல், தமிழர் தொன்மையினைக் கண்டெடுத்த சான்றுகளாக கீழடி, கொற்கை, ஆதிச்சநல்லூர் அழகன்குளத்தில் அகழ்வைப்பகங்கள், மதுரையில் உலகத் தமிழ் அமைப்புகளின் பங்களிப்புடன் 50 கோடியில் தமிழர் பண்பாட்டு மையத்தை உருவாக்குதல், நமது பண்பாட்டின் ஆணிவேர்களான 12,000 கலைக் குழுக்களை அடையாளப்படுத்தி வெளிச்சம் தந்து, வலுப்படுத்துதல் ஆகிய அனைத்துத் திட்டங்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் தந்து, UNESCO இசை நகரமாக இன்றைக்கு சென்னையை

2018 ஜனவரி 11] [திரு. க. பாண்டியராஜன்]

அறிவித்ததன் நீட்சியாக இந்தப் பொன்விழா ஆண்டை தமிழ்க் கலை, தமிழ்ப் பண்பாடு, தமிழ் மொழியின் உன்னத உயரத்தின் ஆண்டாக அறிவித்திருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'மெல்லத் தமிழ் இனி ஓங்கும், மெல்லத் தமிழ் இனி வெல்லும்' என்று சூளுரைத்த இருவருக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.